(ஊ) சேலம் மத்திய கூட்டுறவு வங்கி அதனுடன் இணைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்க மறுத்தலும், விவசாயிகள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. சோ. அழகர்சாமி அவர்கள்

" சேலம் மத்திய கூட்டுறவு வங்கி அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 67 கூட்டுறவு சங்கங்களுக்கு கடன்வழங்க மறுப்பதால் அவ் வட்டாரத்திலுள்ள மக்கள் விவசாயமே செய்ய முடியாமலும், தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களை வாங்க முடியாமலும் சுமார் 1 லட்சம் விவசாயிகள் பெரும் பாதிப்பிற் குள்ளாகியிருக்கும் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை விவாதிக்க "

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். இது முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சிறுமுகை "சவுத் இண்டியா விஸ்கோஸ் " தொழிற்சாலையில் தொழிலாளர்கள் போராட்டம் நடைபெறுவது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது பற்றி என்ன ஆயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்கு இன்னும் கிடைக்க வில்லை. அடுத்து அரசினர் தனித் தீர்மானம்.

3. அரசினர் தனித் தீர்மானம்

1975-ஆம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை ஏற்று உறுதி செய்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

" சிக்கிமை இந்திய ஒன்றியத்தின் ஒரு மாநிலமாக ஆக்குவதற்கென "1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பதாறுவது திருத்த) சட்டம் " என்று மாற்றப்பட்ட குறுந்தலைப்பினைக் கொண்ட 1975-ம் ஆண்டு அரசமைப்பு (முப்பத்தெட்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் வாயிலாக, நாடாளுமன்றத்து ஈரவைகளும்